திரு. ஏ. அ. சுப்பராஜா : அதைச் சார்ந்த விஷயத்தைத் தான் சொல்கிறேன். அவுட்டர் மார்கெட்டில் விலை குறைவாகவும், நமது நியாயவிலைக் கடையில் விலை ஜாஸ்தியாகவும் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. கோதுமை சோளம், மைதா கொடுப்பது ஓரளவுக்கு நல்லது தான். நல்ல தரம் உள்ள கோதுமை, சோளம் கொடுக்கவேண்டும். விலை குறைவானதும் தரமானதுமான பொருள்களைக் கொடுக்கவேண்டு மென்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை ஏற்கனவே கவனித்து, அதற்கான நட வடிக்கை எடுத்து, கூடுமானவரையில் தரமான பொருள்களை சீராக விநியோகிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், அதில் ஏதேனும் குற்றங் குறைகள் இருந்தால், அதை நிவர்த் திப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

(iii) நெல்லை மாவட்டம் உடன்குடி, கொட்டங்காடு பகுதியில் தீ விபத்தும் நிவாரண நடவடிக்கைகளும்.

திரு. டி. மார்டின் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நெல்லை மாவட்டத்தில் சாத்தான்குளம் தொகுதியிலுள்ள உடன் குடிப் பஞ்சாயத்தில் கொட்டங்காடு பகுதியில் 1968 ஜூன் மாதம் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 300-க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்தும் பெரும் பொருட்சேதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் பெருந்துன்பம் அனுபவிக் கின்ற காரணத்தினால் தீ நிவாரண நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டிய அவசியம்பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, there was a fire accident on 9th July 1968 in Kottangadu and Muthukrishna-puram hamlet of Udangudy village, Tiruchendur taluk in Tirunel-veli district. The Collector has incurred an expenditure of a sum of Rs. 8,400 towards relief measures for the victims in anticipa-tion of sanction of the Board of Revenue. The Board has since sanctioned the above expenditure and ratified the Collector's action.

5. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்பிக்கையில்லாத் தீர் மானத்தின் மீது விவாதம் தொடரும். உறுப்பினர் திரு. எல். கணேசன தன்னுடைய உரையைத் தொடர்ந்து பேசுவார்கள்.

திரு. எல். கணேசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய முந்தைய நாள் உரையின் தொடர்ச்சியாக, இன்று சில கருத்துக்களை சொல்ல முன்வருகிறேன். சாத்தான் வேதம் ஓதுகிறது என்பார்கள். அதுபோல காங்கிரஸ் நண்பர்கள் இப்பொழுது அடக்கு முறையைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். கருப்புக் கொடி காட்டும் சாக்கில், கலாட்டா, கலவரம் செய்கிறார்கள். அப்படி கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயக உரிமை என்கிறார்கள். அதையும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனாலும், அவர்கள் மிகவும் கயனித்தன்மையில் நடந்து கொள்ளுகிறார்கள். உதாரணமாக, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எங்கள் பேராவூர்னிக்கு வந்து, ஓய்வு விடுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும்போது, காங்கிரஸ் தொண்டர்கள் கருப்புக் கொடி பிடிக்கிறோம் என்ற போர்வையில், கதவைத் திறந்துகொண்டு அமைச்சரைத் தாக்க முற்பட்டார்கள். அந்த வகையான ஜனநாயகத்தை எப்படி அனுமதிக்க முடியும். குழப்பத்தை